ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2089/56 - 2018 සැප්තැම්බර් මස 22 වැනි සෙනසුරාදා - 2018.09.22

*2089/56 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுச் சட்டம்*

*1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுச் சட்ட திட்டத்தின்படி 31 ஆம் பிரிவுடன் மொழியப்பட வேண்டிய 41 ஆம் பிரிவின்கீழ் விளையாட்டுத்துறை அமைச்சரினால் உருவாக்கப்பட்ட உத்தரவு பிறப்பிப்பு.*

*பைஸர் முஸ்தபா (பா. உ.),*
*சனாதிபதி சட்டத்தரணி,*
*மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும்*
*விளையாட்டுத்துறை அமைச்சர்.*

*கொழும்பு,*
*2018, செத்தெம்பர் 22.*

உத்தரவு

*2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதி 1990/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க தேசிய விளையாட்டுச் சங்க உத்தரவுகள் மற்றும் 2017 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 13 ஆந் திகதிய 2006/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட (திருத்தச் சட்டம்) தேசிய விளையாட்டுச் சங்க உத்தரவுச் சட்டத்தில் காண்பிக்கப்பட்டவாறு இத்தால் திருத்தியமைக்கப்படுகிறது.*

*1. 2016.10.27 ஆந் திகதிய 1990/23 ஆம் இலக்க தேசிய விளையாட்டுச் சங்கங்களின் கட்டளைகளில் கட்டளை இலக்கம் 2(4) கட்டளைக்குப் பின்னர் கீழ்க்காட்டப்படும் கட்டளைகளை உள்ளடக்குதல் :*

*2.4 (அ) தேசிய விளையாட்டுச் சங்கமொன்றைப் பதிவு செய்வதற்காக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பமொன்று கிடைக்கப்பெற்றவுடன், மேற்படி கட்டணங்களைச் செலுத்திய பின்னர் பின்வரும் அளவுகோல்களை அடிப்படையாகக் கொண்டு குறித்த வகைப்படுத்தலின் பின்னர் 2016.10.27 ஆந் திகதிய 1990/23 ஆம் இலக்க தேசிய விளையாட்டுச் சங்கங்களின் கட்டளைகளில் 2(5) கட்டளைப்படி அந்தச் சங்கத்தைப் பதிவுசெய்யும்படி பணிப்பாளர் நாயகத்தால் விளையாட்டுத் துறை அமைச்சரிடம் பரிந்துரைக்கப்படுதல் வேண்டும்.*

(i) *'அ' தரம் - உறுப்பினர்கள்/விளையாட்டுச் சங்கங்கள்/இணைந்த நிறுவனங்கள் 25 அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையுடன் கூடிய வருடாந்த புரள்வு ரூபா மில்லியன் 50 அல்லது அதற்கு மேல்,*

(ii) ‘ஆ’ தரம் - உறுப்பினர்கள்/விளையாட்டுச் சங்கங்கள்/இணைந்த நிறுவனங்கள் 15 அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையுடன் கூடிய வருடாந்த புரள்வு ரூபா மில்லியன் 10 அல்லது அதற்கு மேற்பட்ட, ஆயினும் ரூபா மில்லியன் 50 இற்குக் குறைந்த,

(iii) ‘இ’ தரம் - உறுப்பினர்கள்/விளையாட்டுச் சங்கங்கள்/இணைந்த நிறுவனங்கள் எந்தவொரு எண்ணிக்கையுடனும் கூடிய வருடாந்த புரள்வு ரூபா மில்லியன் 10 இற்குக் குறைந்த

ஆயினும், சர்வதேச போட்டியின்போது எவரேனும் தனி நபரது அல்லது குழுவின் செயலாற்றுகையை கவனத்தில் கொண்டு அமைச்சர் அவர்களால் குறித்த விளையாட்டுக்கு ஏற்புடையதாக தேசிய சங்கங்களுக்கு ஏற்புடையதாகும் வகையில் ‘அ’ தரம் அல்லது ‘ஆ’ தரத்திற்குத் தரமுயர்த்தப்படலாம்.

(ஆ) இந்தக் கட்டளை அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்படும் திகதி தொடக்கம் மூன்று வாரங்களுக்குள் அமைச்சர் அவர்களின் கருத்துக்களை அறிந்து பணிப்பாளர் நாயகம் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தில் தற்போது பதிவாகியுள்ள அனைத்து தேசிய விளையாட்டுச் சங்கங்கள் தொடர்பாக மதிப்பீடு/மதிப்பாய்வு செய்து வகைப்படுத்தலுக்காக 05 உறுப்பினர்களுக்கு மேற்படாத வகையில் குழுவொன்றை நியமனம் செய்தல் வேண்டும். மேற்படி குழுவால் பதிவு செய்யப்பட்டுள்ள சங்கங்களின் வகைப்படுத்தல் தொடர்பான நடவடிக்கைகளை முடிவுறுத்தி, குறித்த பரிந்துரைகளை அந்த வகைப்படுத்தல் தொடர்பாக மீளாய்வு செய்யும் பொருட்டு கடித ஆவணங்களைத் தமக்கு அனுப்பிவைத்த திகதி தொடக்கம் ஒரு வாரத்திற்குள் அந்தப் பரிந்துரைகளைப் பணிப்பாளர் நாயகத்திட்டம் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

2. 2017.02.13 ஆந் திகதிய 2006/13 ஆம் இலக்க (திருத்தம் செய்த) தேசிய விளையாட்டுச் சங்கங்களின் கட்டளைகளில் கட்டளை இலக்கம் 07 (xiv) (ஆ) பந்தி நீக்கப்பட்டு பின்வரும் புதிய பந்தி உள்ளடக்கப்படுகின்றது. விசேட பொதுச்சபைக் கூட்டம் அல்லது அதி விசேட பொதுச்சபைக் கூட்டம் நடாத்தி பின்வரும் உறுப்பினர்கள் மூன்று பேர்களைக் கொண்டமைந்த பதவியாளர் தேர்தல் குழுவை நியமனம் செய்தல் :

(I) ஓய்வுபெற்ற மேல் நீதிமன்றம் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இரண்டு நீதிபதிகள் மற்றும்/அல்லது குறித்த A தரத்தின் சங்கத்தில் முனைப்பான அலுவலர், தேர்தல் திணைக்களத்தில் அல்லது தேர்தல் ஆணைக்குழுவில் ஓய்வுபெற்ற சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் மற்றும்/அல்லது பதவியாளர் தேர்தல் நடாத்தல் தொடர்பாக அனுபவம் தகைமையுள்ள ஓய்வுபெற்ற அரசாங்க அலுவலர்.

(II) ஓய்வுபெற்ற மேல் நீதிமன்றம் மற்றும்/அல்லது மேன்முறையீட்டு நீதிபதியொருவர் மற்றும் B தரத்தின் சங்கத்தில் முனைப்பான உறுப்பினர் அல்லாத தேர்தல் திணைக்களத்தில் அல்லது தேர்தல் ஆணைக்குழுவில் ஓய்வுபெற்ற சிரேஷ்ட மற்றும்/அல்லது ஓய்வுபெற்ற சிரேஷ்ட அரசாங்க அலுவலர்கள், உறுப்பினர்கள் இரண்டு பேர்.

(III) “இ” தரத்தின் சங்கம் தொடர்பில் குறித்த சங்கத்தில் முனைப்பான உறுப்பினர்கள் அல்லாத, தேர்தல் நடாத்தல் தொடர்பாக அனுபவமுள்ள ஓய்வுபெற்ற சிரேஷ்ட அரசாங்க அலுவலர்கள் 03 பேர்களைக் கொண்டமைந்த குழுவொன்று.

3. 2017.02.13 ஆந் திகதிய 2006/13 ஆம் இலக்க (திருத்தம் செய்த) தேசிய விளையாட்டுச் சங்கங்களின் கட்டளைகளில் கட்டளை இலக்கம் 7 (xiv) (இ) கட்டளைக்கு உடனடுத்துப் பின்வரும் புதிய கட்டளைகளை உள்ளடக்குதல் :

(இ) மேற்குறிப்பிடப்பட்டுள்ளவாறு பதவியாளர் தேர்தல் குழு நியமனம் செய்த பின்னர், அந்த நியமனத் திகதி தொடக்கம் இரண்டு மாதங்களுக்குக் குறையாத காலப்பகுதிக்குள் பதவியாளர் தேர்தல் குழு வேட்புமனு கோருதல் வேண்டும்.

(ஈ) விளையாட்டுச் சட்டத்தின்படி அலுவலர்களாகத் தெரிவுசெய்து கொள்வதற்குத் தகைமை பெறும் வேட்பாளர்களின் தகைமைகளைத் தீர்மானிக்கும் அதிகாரம் பதவியாளர் தேர்தல் குழுவிற்கு இருத்தல் வேண்டும். ஒவ்வொரு தேசிய விளையாட்டுச் சங்கத்தினதும் யாப்பு மற்றும் ஏற்புடைய ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக அதனை மேற்கொள்ளுதல் வேண்டும்.

(உ) தேர்தல் நடாத்தும் செயற்பாட்டின் பொருட்டு தேர்தல் பெயர் இடாப்பில் உள்ள தகைமைகள் தொடர்பில் அளவுகோள்களைத் தயாரிக்கும் அதிகாரம் மற்றும் அலுவலர்களைத் தெரிவு செய்வதற்காக வாக்கினைப் பயன்படுத்தும் உரிமை தொடர்பில், தேர்தல் பெயர் இடாப்பினை பரிசீலனை செய்வதற்கு, வேட்புமனு கோருவதற்கு மற்றும் வாக்கெடுப்பு நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்குப் பதவியாளர் தேர்தல் குழுவிற்கு அதிகாரம் இருத்தல் வேண்டும்.

(ஊ) 7 (xiv) (ஈ) ஒழுங்குவிதிப் பிரகாரம் மேற்படி குழுவை நியமனம் செய்த திகதி தொடக்கம் 14 நாட்களுக்குள் தேர்தல் குழுவால் வாக்காளர் பெயர்ப்பட்டியல் தொடர்பான நடவடிக்கைளை முடிவுறுத்தி தேசிய விளையாட்டுச் சங்கத்தின் எல்லா உறுப்பினர்களுக்கும் அறிவிக்கப்படுதல் வேண்டும். "தேர்தல் நடாத்துவதற்குக் குறைந்தபட்சம் 21 நாட்களுக்கு முன்னராக அலுவலர்களைத் தெரிவுசெய்வதற்குப் பொருத்தமான அலுவலர்களின் பெயர்ப்பட்டியல் தொடர்பான நடவடிக்கைகளைப் பதவியாளர் தேர்தல் குழுவால் முடிவுறுத்தப்படுதல் வேண்டும்."

(ஊ) பதவியாளர் தேர்தல் குழுவின் தீர்மானங்கள் தொடர்பாகத் திருப்தியடையாத எந்தவொரு நபரொருவரும் 8(1) ஒழுங்கு விதிப் பிரகாரம் குறித்த தீர்மானம் வழங்கப்பட்ட திகதி தொடக்கம் 07 நாட்களுக்குள் விளையாட்டுத்துறை விடயப்பொறுப்பு அமைச்சரிடம் அதற்கு எதிராக மேன்முறையீடு சமர்ப்பிக்கப்படலாம்.

4. 2016.10.27 ஆந் திகதிய 1990/23 ஆம் இலக்க தேசிய விளையாட்டுச் சங்கங்களின் கட்டளைகள் இலக்கம் 8 அகற்றப்பட்டு பின்வரும் கட்டளைகளைப் பதிலீடு செய்வதன் மூலம்,

8. (1) பதிவுசெய்யப்பட்ட தேசிய விளையாட்டுச் சங்கம் அல்லது தேசிய விளையாட்டுச் சங்கமொன்றின் தேர்தல் குழுவால் வழங்கப்பட்ட தீர்மானம் அல்லது மேற்கொண்ட நடவடிக்கை தொடர்பாக அசாதாரணம் ஏற்பட்ட எந்தவொரு தரப்பினாலும் குறித்த தீர்மானம் அல்லது நடவடிக்கை அறிவிக்கப்பட்ட திகதி தொடக்கம் 07 நாட்களுக்குள் விளையாட்டுத்துறை விடயப்பொறுப்பு அமைச்சர் அவர்களிடம் மேன்முறையீடு சமர்ப்பிக்கப்படலாம்.

8. (2) A தரத்தில் அல்லது B தரத்தில் சங்கம் தொடர்பில் அவ்வாறு கிடைக்கப்பெற்ற மேன்முறையீடொன்றை அமைச்சர் அவர்களால் கவனத்தில் கொண்டதன் பின்னர் உயர் நீதிமன்றம் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதி அடங்கலாக மூன்று பேர்களைக் கொண்டமைந்த ஆலோசகர் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட முடியும். C தரத்தின் சங்கம் தொடர்பில், ஓய்வுபெற்ற சிரேட்ட அரசாங்க அலுவலர்கள் மூன்று பேர்களைக் கொண்டமைந்த குழுவிடம் முன்வைக்கப்படுதல் வேண்டும். ஒவ்வொரு குழுவாலும் மீளாய்வு செய்வதற்காக மேன்முறையீடுகள் தொடர்பான தீர்மானங்களைத் தமக்குக் கிடைக்கப்பெற்ற திகதி தொடக்கம் 07 நாட்களுக்குள் விளையாட்டுத்துறை விடயப்பொறுப்பு அமைச்சரிடம் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

8. (3) அதனடுத்து, விளையாட்டுத்துறை விடயப்பொறுப்பு அமைச்சர் அவர்களினால், வேலை செய்யும் 07 நாட்களுக்குள் தமது தீர்மானத்தைச் சம்பந்தப்பட்ட விளையாட்டுச் சங்கத்திடம் அறிவிக்கப்பட வேண்டும் என்பதுடன், அது இறுதியானதும் முடிவானதும் தீர்மானமாகும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.